# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 10** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 20 | |
| 2 | 15 | |
| 3 | 15 | |
| 4 | 20 | |
| 5 | 30 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

**1.கீழேயுள்ள பந்தியை வாசித்த பின் வினாக்களுக்கு விடை தருக. (20புள்ளிகள்)**

தனது தாய்மொழியைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரியாத ஒருவன் வேறோர் மொழியைச் சரியாகப் புரிந்துகொள்வது என்பது மிகக் கடினமான விடயம் என்கிறது ஒரு ஜேர்மன் பழமொழி. இப்பழமொழி மொழிக்கு மட்டுமல்லாது கலை, கலாசாரம், சமயம் என்பவற்றிற்கும் பொருந்துவதாகும்.

ஒரு குறிப்பிட்ட இனமக்களை அவர்கள் வதியும் நாட்டிலிருந்து இனம்கண்டுகொள்ளும் காலம் மறைந்துவிட்டது. இந்தநூற்றாண்டிலும் இதற்கு முன்பும், உலகின் பல பாகங்களிலும் ஏற்பட்ட கலாசார, அரசியல், பொருளாதாரப் புரட்சிகளும் மாற்றங்களும் பல்வேறு இனமக்களைப் பல்வேறு நாடுகளில் வாழ வழிவகுத்துவிட்டன.

முதலாளி வர்க்கத்தின் கோட்டையெனப் பலராலும் கருதப்படும் அமெரிக்காவில் சமதர்ம நாட்டின் சிறப்பிடம் எனக்கருதப்படுகின்ற சீன தேசத்தின் குடிமக்கள் பெருந்தொகையாக வாழ்கிறார்கள். அவர்கள் இன்றைய அமெரிக்காவின் குடிமக்கள் ஆவர். ஆயினும் அவர்கள் அன்றும் இன்றும் சீனர்களாகவே வாழ்கிறார்கள். எதிர்காலத்திலும் அவர்கள் சீனர்களாகவே வாழப்போகிறார்கள். இவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காகத் தமது தேசத்தைவிட்டு வெளியேறி வாழ்ந்தாலும் இன்றுவரை தங்கள் மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை மறக்கவில்லை என்று கூறலாம். சீனர்கள் மட்டுமல்ல யூதர்கள், அராபியர்களும் கூட இப்படி வாழ்கிறார்கள்.

உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் தன் தனித்துவத்தை ஓர் இனம் பேணுமாயின் அவ்வினமும், அவ்வினத்தின் மொழி, கலை, கலாசாரம் போன்ற சிறப்பியல்புகளும் என்றும் எச்சக்தியாலும் அழிக்கப்படமுடியாதன.

தமிழர்களாகிய நாம் இன்று உலகின் ஐந்து கண்டங்களிலும் 86 க்கும் மேற்பட்ட நாடுகளில் பரந்து வாழ்கின்றோம். எம்முள் எத்தனை பேர் தமிழர்களாக வாழ்கின்றோம்? தமிழ்க் கலாசாரத்தை எம் வாழ்க்கை நெறியாகக் கருதுகிறோம்? எத்தனை பேர் தமிழர்களைக் கண்டால் தமிழில் உரையாடுகிறோம்? சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. நம்மை நாமே கேட்க வேண்டியுள்ளது.

தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் எச்சூழலில் வாழ்ந்தாலும் தமிழர்களாகத், தமிழைத் தம் மொழியெனக் கொள்பவர்களாக, தமிழர் பாரம்பரியத்தில் ஈடுபாடு கொண்டவர்களாக, தமிழர் கலை கலாசாரத்தில் நாட்டம் கொண்டவர்களாக வாழவேண்டும். இப்படித் தமிழர்களாக வாழ முயன்றால், தமிழுக்கும் தமிழர் பாரம்பரியத்துக்கும் தம்வாழ்வில் உயரிய இடத்தைக் கொடுக்க முன்வந்தால் தமிழ் வாழும். தமிழர் வாழ்வர்.

மக்களின் ஒத்துழைப்பின்றி மொழி, கலை, கலாசாரம் என்பவற்றை அரசியல் சட்டங்களினாலும் பிரத்தியேக வேலைத்திட்டங்களினாலும் காப்பாற்றவோ வாழ வைக்கவோ முடியாது. இவை வாழ்வதும் தேய்வதும் அவ்வின மக்களின் கைகளிலேயே இருக்கிறது. எமது ஒத்துழைப்பினால் நம் மொழியை வாழ வைப்போம்.

1.ஜேர்மன் பழமொழி கூறும் கருத்தை உமது வசனத்தில் எழுதுக. (2 புள்ளி)

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. பல்வேறு இன மக்கள் பல்வேறு நாடுகளிலும் பரந்துவாழக் காரணம் என்ன கூறப்பட்டுள்ளது? (2 புள்ளி)

3. சீனமக்களின் வாழ்க்கைச் சிறப்பு என்னவென்று இங்கே கண்டீர்? (3 புள்ளி)

---

4. ஓர் இனம் தன் தனித்துவத்தைப் பேணினால் அவ்வினத்திற்குக் கிடைக்கும் பேறு என்ன?

(2 புள்ளி)

5.இப் பந்தியில் தமிழர்களை நோக்கி வினாவப்பட்ட வினாக்கள் எவை? (3 புள்ளி)

6. தமிழ் மொழியை வாழ வைக்கத் தமிழர்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கண்டீர்? (5புள்ளி)

7. மக்களுடைய ஒத்துழைப்பின் வலிமையை இப்பந்தியிலிருந்து விளக்குக.

**2. கீழேதரப்படும் குறிப்புகளைக் கொண்டு 100 சொற்களுக்கு அமைவாகப் பந்தி அமைத்து எழுதுக. ( 15 புள்ளி )**

பெயர்: தனிநாயகம் அடிகள் இயற்பெயர்: சேவியர்

பிறப்பு: 02.08.1913

பிறந்த இடம்: இலங்கை, ஊர்காவற்றுறை, கரம்பொன் கிராமம்.

பெற்றோர்: தாய் - சிசிலி இராசம்மா

தந்தை – ஆசிரியர் கணபதிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ்

கல்வி: யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரி

1930 இல் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையில் சித்தி

கொழும்பு புனித பேனாட் குருமடம்- குருப்பயிற்சி – துறவு வாழ்வு ஆரம்பம்

உரோமாபுரி 'ஊர்பான்' குருத்துவ சர்வகலாசாலையில் இறைஇயலில் கலாநிதிப்பட்டம்

இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியலிலும் இலக்கியத்திலும் முதுமானிப்பட்டம்

1955 – 1957 கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம்

அறிந்திருந்த மொழிகள் - தமிழ், ஆங்கிலம், இலத்தீன், ஸ்பானிஸ், போர்த்துக்கீசம், பிரெஞ்சு, இத்தாலியம், ஜேர்மன்

பணி : ஆசிரியர் – தமிழ்நாடு புனித திரேசாள் கல்லூரி

விரிவுரையாளர் – 1952 – 1961 இலங்கை பேராதனைப்பல்கலைக்கழகம்

பேராசிரியர் – 1970-71 பாரிஸ்பல்கலைக்கழகம், நேப்பிள்ஸ்பல்கலைக்கழகம்.

பீடாதிபதி –கலைத்துறைப் பேராசிரியர்- 1961-1969 மலேசியப்பல்கலைக்கழகம்

தமிழ்த் தூது – 1947இல் தமிழ் இலக்கியக் கழகத்தை உருவாக்கி தமிழ்த் தூதை ஆரம்பித்தார்.

1950இல் யப்பான், வட தென் அமெரிக்கா தமிழ்த் தூது.

1960இல் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, இத்தாலி, ரசியா தூது.

தமிழ் ஆராய்ச்சிப்பணி – 1964இல் அனைத்துலக ஆராய்ச்சிக்கழகம் அமைத்தார்

1966இல் கோலாலம்பூரில் முதலாவது தமிழ் ஆராய்ச்சி மகாநாடு

1968, 1970, 1974, 1981, 1987, 1994, எனப் பல மாநாடுகள்

மறைவு – 01.09.1980

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------

**3. கடிதம் எழுதுதல் (15 புள்ளி )**

நீர் வேலை அனுபவம் பெறுவதற்காக ஹோம்புஸ் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்ல விரும்புகிறீர். அதற்கான காரணங்களை விளக்கியும் அனுமதி கோரியும் பாடசாலை அதிபருக்குக் கடிதம் எழுதுக. கடிதம் 100 சொற்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

**4. கட்டுரை எழுதுதல் ( 20 புள்ளி )**

தரப்பட்டுள்ளவற்றுள் ஒன்றைத் தெரிந்து 175-200 சொற்களுக்கு அமையக் கட்டுரை எழுதுக.

1) குடும்பத்தினருடன் அயல் மாநிலத்தில் நீர் மேற்கொண்ட 3 நாள் சுற்றுலாவின் போது உமக்குக் கிடைத்த அனுபவம், நீர் பார்த்த, புதிதாக அறிந்து கொண்ட விடயங்கள் பற்றிய தினக்குறிப்பேட்டுப் பதிவை 3 நாட்களுக்கு எழுதுக.

2) நீர் பார்த்து இரசித்த ஒரு திரைப்படம் பற்றிய விமரிசனத்தை எழுதுக.

3) சமூகத்தொடர்புச்சாதனங்களின் வளர்ச்சி எம் இளையோரை எந்தளவு பாதிக்கிறது என்பதை மதிப்பீடு செய்து கட்டுரை ஒன்று எழுதுக.

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

---

**5. கேட்டுக் கிரகித்தல் (30 புள்ளி)**

1) அ. கதையில் வந்த தேவதை என்ன கூறியது? (1 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆ. பிள்ளைகளை ஆசிரியர் என்ன கேட்டார்? (2 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இ. பிள்ளைகள் அளித்த பதில்கள் என்ன? (3 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஈ. கடைசியில் மாணவன் கூறிய பதில் ஆசிரியருக்கு மன வருத்தத்தை உண்டாக்குமா? உமது கருத்தை எழுதுக. (4 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2) அ. விநோதன் என்ன பரிசு பெற்றார்? (1 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆ. அவருக்கு வாழ்த்துக் கூறியவர் யார் சார்பாக அதைக் கூறினார்? (2 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இ. விநோதன் தனது வெற்றிக்கு உதவியவர்கள் யார் யார் என்று கூறுகிறார்? (3 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஈ. விநோதனின் ஆசிரியர் செய்வித்த பயிற்சிகள் எவை? (3 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

உ. விநோதன் கடைசியாகக் கூறிய வாசகம் என்ன? (1 புள்ளி)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3) அ. அரசியின் மனக் குழப்பத்திற்குக் காரணம் என்ன? (2 புள்ளி)

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஆ. அரசன் சபையில் என்ன கேள்வி கேட்டார்? (2 புள்ளி)

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இ. அரசியின் சகோதரன் அளித்த பதில் என்ன? (2 புள்ளி)

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஈ. அரசனின் தம்பிக்கு மந்திரிப் பதவி பொருத்தமானதெனக் கருதுகிறீரா?
உமது கருத்தை எழுதுக. (4 புள்ளி)

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------